# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 20/2015**

1) திருமதி ஏ. மஞ்சு, க/பெ அய்யனார்,
2) திருமதி பி. கோகிலா, க/பெ பூமாலை,
3) திருமதி ஆர் கண்ணகி, க/பெ ராஜு
4) திருமதி டி. அமிர்தவள்ளி, க/பெ துரைசாமி,
5) திரு ஜெ. இளங்கோ, த/பெ ஜெகநாதன்,
6) திருமதி எஸ். சரசு, க/பெ செல்வம்
ரயில்வே லைன் தெற்கு தெரு,
பொன்னம்மாபேட்டை, சேலம் – 636 001.
கைபேசி – 9791564519 ........மேல் முறையீட்டாளர்
(திரு. கோவிந்தன்,பொது செயலாளர்,
சேலம் மண்டல நுகர்வோர் பாதுகாப்பு சங்கம்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
சேலம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி, உடையப்பட்டி,
சேலம் – 636 014. ......... எதிர்மனுதாரர்
(திருமதி. A. பிரேமலதா,
உதவி செயற்பொறியாளர்/தில்லை நகர்)

**கேட்புரை நாள்: 28–4–2015**

**ஆணை நாள் : 19–5–2015**

1) திருமதி ஏ. மஞ்சு, க/பெ அய்யனார், 2) திருமதி பி. கோகிலா, க/பெ பூமாலை, 3) திருமதி ஆர் கண்ணகி, க/பெ ராஜு 4) திருமதி டி. அமிர்தவள்ளி, க/பெ துரைசாமி, 5) திரு. ஜெ. இளங்கோ, த/பெ ஜெகநாதன், 6) திருமதி எஸ். சரசு, க/பெ செல்வம் ஆகியோரின் 2.2.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 20/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது கேட்புரை 28.4.2015 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், மற்றும் இருதரப்பினராலும், கேட்புரையின் பொழுது

எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>**ஆணை**</u>

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>** தற்போதைய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிமுறைகளின்படி புதிய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் மின்வாரிய படிவம் VI இரட்டிப்பு CCD வருவாய்த்துறை வழங்கிய குடியிருப்பு சான்று, குடும்ப ரேசன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களை பெற்றுக் கொண்டு அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கி உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர்கள் அனைவரும் பொன்னாம்பேட்டை ரயில்வே லைன் தெற்கு தெரு பகுதியில் வசிக்கிறார்கள். அவர்கள் மேற்கண்ட விலாசத்தில் ரேசன் கார்டு மற்றும் வாக்காளர் அடையாள அட்டை, வட்டாட்சியர் வழங்கிய குடியிருப்பு சான்று உள்ளது என்று தெரிவித்துள்ளார்கள். மேலும், மேற்கண்ட அவர்களின் வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள்.

2.2 அவர்கள் குடியிருக்கும் இடம் வக்பு வாரியத்திற்கு சொந்தமானது என்றும், அங்கு மின் இணைப்பு வழங்க வக்பு போர்டு ஆட்சேபனை தெரிவித்துள்ளது என்று அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

2.3 மேல்முறையீட்டாளர்கள் தங்களின் வீடுகளுக்கு மின் இணைப்பு தரவேண்டும் என்று சேலம் மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்கள்.

2.4 மன்றம் தன்னுடைய **31.12.2014** நாளிட்ட ஆணையில் மனுதாரர்கள் ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி தேவையான ஆவணங்களை ஆதாரமாக சமர்ப்பிக்கவில்லை என்பதால், அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க முடியாது என்று தெரிவித்துள்ளது.

2.5 எனவே, மேற்கண்ட ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர்கள் தங்களுடைய இந்த மேல்முறையீட்டு மனுவை மின் குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

3.1 மேற்கண்ட விலாசத்தில் நீண்டகாலமாக குடியிருந்து வசித்து வரும் அவர்களின் வீடுகளுக்கு தனிதனியாக புதிய மின் இணைப்பு வேண்டி மின்வாரிய விதிமுறைகளின்படி உரிய ஆவணங்களை இணைத்து சேலம் தில்லை நகர் பிரிவு அலுவலகத்தில் 23.11.2013 ஆம் தேதியன்று விண்ணப்பித்தார்கள்.

3.2 தில்லை நகர் பிரிவு AEE அவர்களை பலமுறைகள் நேரில் அணுகி மின் இணைப்பு வழங்க கேட்டுக் கொண்ட பிறகும் அவரும், CA, CI போர்மேன் ஆகிய அனைவரும் அவர்கள் இடத்தை பார்வையிட்டு வெகு விரைவில் மின் இணைப்பு வழங்குவதாக கூறிச் சென்றார்கள்.

3.3 அவர்கள் மீண்டும் மீண்டும் AEE அவர்களை நேரில் சென்று கேட்டபோது அவர்கள் குடியிருக்கும் வீட்டின் அடி நிலம் சேலம் ஜாமியா மஜித் நிர்வாகத்திற்கு சொந்தமானது எனவும் அந்த இடத்திற்கு மின் இணைப்பு கொடுத்தால் அவர்கள் அடி நிலத்திற்கு சொந்தம் கொண்டாடுவீர்கள் எனவும் அதனால் மின் இணைப்பு வழங்க முடியாது எனவும் கூறிவிட்டார்கள். 6.2.2014 நாளிட்ட கடிதத்தில் அவர்கள் குடியிருக்கும் நிலம், சேலம் ஜாமியா மஜீத் போர்ட்டுக்கு சொந்தமாக உள்ளதால் வக்பு வாரியத்தின் தடையில்லா சான்று பெற்று வந்தால் மட்டுமே புதிய மின்னிணைப்பை வழங்க இயலும் என்று கூறி விண்ணப்பத்தை திருப்பி கொடுத்துள்ளார்கள்.

3.4 தலைவர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் சேலம் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு 20.11.2014 நாளில் முறையீடு செய்தார்கள்.

3.5 26.12.2014 அன்று நடைபெற்ற மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற கூட்டத்தில் அவர்களை அழைத்து விசாரித்து அவர்கள் கொடுத்திருந்த விண்ணப்பம் மற்றும் ஆவணங்களின் நகல்களை அவர்கள் பெற்று கொண்டு ஒரு வாரத்திற்குள்ளாக புதிய மின்

இணைப்புகள் வழங்குவதற்கான உத்திரவை கடிதம் மூலம் அனுப்புவதாக உறுதி அளித்தார்கள். ஆனால், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் கடிதத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின்சார பகிர்மான தற்போதைய விதித்தொகுப்பு எண்.27(4)இன்படி அவர்கள் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க முடியாது என்று உத்தவிடப்பட்டுள்ளது.

3.6 அவர்கள் குடியிருக்கும் பகுதியில் அவர்கள் முன்னோர்கள் காலம் முதல் சுமார் 100 ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள்.

3.7 அவர்கள் பகுதியில் குடியிருப்பவர்களின் பெயரில் 200 க்கும் மேற்பட்ட மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

3.8 அவர்கள் வசித்து வரும் பொன்னம்மாபேட்டை ரயில்வே லைன் தெற்குத்தெரு பகுதி நீண்ட காலமாக அவர்கள் சுவாதீனத்தில்தான் உள்ளது. ஆனால் இந்த இடம் சேலம் ஜாமியா மஜீத் டிரஸ்ட் போர்டுக்கு சொந்தமானது என வாரிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.9 பல ஆண்டுகளாக இந்த விலாசத்தில் அவர்கள் பெயரில் குடும்ப ரேசன் கார்டு மற்றும் வாக்காளர் பட்டியல் உள்ளது.

3.10 அவர்கள் குடியிருக்கும் சிறிய வீடுகளுக்கான நகராட்சி வீட்டுவரி கட்டணம் ரூ.28.00 கீழ் இருந்த காரணத்தால் முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சி காலத்தில் தள்ளுபடி செய்துவிட்டனர்.

3.11 அவர்கள் அனைவரும் கூலி வேலைக்கு செல்லும் சாதாரண ஏழை எளிய மக்கள், அவர்கள் பிள்ளைகள் இரவு நேரத்தில் படிக்க கூட வசதி இன்றி சிரமப்படுகின்றனர்.

3.12 இதுவரையில் அவர்கள் குடியிருக்கும் நிலம், சம்பந்தமாக அவர்களுக்கும் சேலம் ஜாமியா மஜீத் நிர்வாகத்திற்கும் எந்த ஒரு கோர்ட்டு வழக்கும் நீதி மன்ற உத்தரவும் இல்லை.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரை</u>

4.1 சம்மந்தப்பட்ட மேல்முறையீட்டு மனுதாரர்கள், மின் இணைப்பு வேண்டி தில்லை நகர் பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பம் அளித்ததையடுத்து கள ஆய்வின்பொழுது மனுதாரர் மின்

இணைப்பு கோரும் இடம் கிழக்கு இரயில்வே லைன் தெற்கு தெரு பகுதி வக்பு வாரியத்திற்கு சொந்தமானது எனவும்,மேற்படி பகுதியில் தனி நபர் பெயரில் மின் இணைப்பு அளிக்கக்கூடாது எனவும், வக்பு வாரியத்திடமிருந்து தடையில்லா சான்று பெற்ற பின்னரே மின் இணைப்பு அளிக்க வேண்டும் என ஆட்சேபணை மனு ஏற்கனவே பெறப்பட்டுள்ளது என்று அறியப்பட்டது.

4.2 இது சம்மந்தமான அலுவலக ஆவணங்கள் ஆய்வு செய்ததில் மேற்படி வக்பு வாரியத்திற்கு தில்லை நகர் பிரிவில் இருந்து 15.10.2004 மற்றும் 28.5.2007 தேதியிட்ட கடிதங்கள் மூலம் மேற்படி நிலம் தங்களுக்கு சொந்தம் என்பதற்கு சான்று கேட்டு அனுப்பப்பட்டது. அதற்கிணங்க வக்பு வாரியம் 21.8.2007 தேதியிட்ட கடிதத்தில் ஆட்சேபணை கடிதமும் வட்டாட்சியர் அவர்கள் அளித்த ஆவணங்களும் உதவி செயற்பொறியாளர், தில்லை நகர் பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.3 மேலும், சென்னையில் டிரஸ்ட் போர்டு சம்மந்தமான இடத்திற்கு மின் இணைப்பு வழங்க வேண்டி வழக்கு தொடர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் (W.P.No.18834/2009 High Court Madras) வழக்கு டிரஸ்ட் போர்டுக்கு சாதமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்விடத்தில் குறிப்பிட்டுள்ள மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்தததில் 2004இம் ஆண்டிலிருந்து மேற்குறிப்பிட்டுள்ள இடத்திற்கு மின் இணைப்பு வழங்குவதில் ஆட்சேபணை இருந்தததை அடுத்து திருமதி. மஞ்சு மற்றும் 5 நபர்களுக்கு உதவி செயற்பொறியாளர் தில்லை நகர் அவர்கள் 6.2.2014 தேதியிட்ட கடிதம் மூலம் மின் இணைப்பு வழங்க வக்பு வாரியத்தின் தடையில்லா சான்று பெற்று அளிக்கும்படி தகவல் அளிக்கப்பட்டது.

4.4 மேற்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையில் மனுதாரர்கள் மேற்கண்டஇடத்தில் இருப்பதற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க ஆதாரங்களான 1) பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரம் 2) மின் இணைப்பு கோரி விண்ணப்பம் கொடுக்கும் முன்னர் வழங்கப்பட்ட வாடகை ரசீது 3) வாடகை ஒப்பந்தப் பத்திரம் 4) உரிய அலுவலரால் வழங்கப்பட்ட அனுபவம் செய்து வருவதற்கான ஆவணம் 5) நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்பாணைகள் இவைகளில் ஏதெனும் ஒன்றுகூட

சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அவர்களுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணை மின்சார பகிர்மான விதித்தொகுப்பு எண்.27(4)இன்படி மின் இணைப்பு வழங்க இயலாது. அதன்படியே மனுதாரர்கள் தாங்கள் குடியிருந்து வரும் இடத்தின் அனுபவ பாத்தியதை நிரூபிப்பதற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க ஆதாரங்களை சமர்ப்பிக்கவில்லை என்பதால் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க இயலாது என்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் உத்தரவிட்டது.

4.5 மனுதாரர்கள் குடியிருந்து வரும் பகுதியில் தனி நபர் பெயரில் ஏற்கனவே வழங்கப்பட்ட மின் இணைப்புகள் ஆட்சேபனை பெறப்படுவதற்கு முன்பாக வழங்கப்பட்டது. 2004க்கு பின் வழங்கப்பட்ட மின் இணைப்புகள் முத்தவல்லி ஜாமியா மஜித் டிரஸ்ட் போர்டு பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.4.2015 அன்று மின் குறைதீர்ப்பாளரின் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளரின் சார்பாக திரு. கோவிந்தன், பொது செயலாளர், சேலம் மண்டல நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் அவர்கள் கலந்து கொண்டுதன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் திருமதி. A. பிரமலதா, உதவி செயற்பொறியாளர், தில்லை நகர் அவர்கள் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6. <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>

6.1 மேல்முறையீட்டாளரின் சார்பாக திரு. சி. கோவிந்தன், பொதுச் செயலாளர், சேலம் மண்டல நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் அவர்கள் கலந்து கொண்டு மேல்முறையீட்டு மனுவிலுள்ள தன்னுடைய தரப்பு வாதத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

6.2 மேல்முறையீட்டாளர்களின் பிரதிநிதி அவர்கள், மேல்முறையீட்டாளர்கள் அங்கு இரண்டு தலைமுறையாக அங்கு வசித்து வருவதாகவும், அந்த இடத்தின் பட்டா பெறுவதற்கு வருவாய்துறையிடம் மனு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

6.3 மேலும், மின்சார சட்டத்தின்படி குடியிருப்போருக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்று உள்ளது என்றும், மின்சாரம் அடிப்படை உரிமைகளில் (fundamental rights) ஒன்று என்பதால் மேல்முறையீட்டாளர்களுக்கு மின்சாரம் கிடைக்கவேண்டும் என்பது அவர்களின் அடிப்படை உரிமை என்று வாதிட்டார்.

6.4 தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)ஐ சுட்டிக்காட்டி வளாகத்தின் உரிமம்தாரர் ஆட்சேபனை செய்தாலும் குடியிருப்போருக்கு அவர் குடியிருப்போர் என்பதை உறுதி செய்யும் ஆவணங்களை சமர்ப்பித்து படிவம் எண்.6ன்படி காப்புறுதி பத்திரம் (Indemnity Bond) மற்றும் இரண்டு மடங்கு காப்பத்தொகை (Security Deposit) செலுத்தும் பட்சத்தில் மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று வாதிட்டார். மேலும்,பிற்காலங்களில் இது சம்பந்தமான நீதிமன்ற வழக்குகள் வருமாயின் மேற்கண்ட மின் இணைப்புகளை இழக்க மேல்முறையீட்டாளர்கள் சம்மதிப்பதாகவும் கூறினார். மேலும், அந்நிலையில் மின் வாரியத்திற்கு எதிராக மின்இணைப்புகளை துண்டிக்க கூடாது என்று வழக்கு தொடரமாட்டோம் என்றும் தெரிவித்தார்.

6.5 மேல்முறையீட்டாளர்கள் அந்த இடத்தில் குடியிருப்போர் என்பதற்கு சான்றாக குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் வட்டாட்சியர் வழங்கியுள்ள குடியிருப்பு சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவைகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் 2.12.2013 நாளிட்ட ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சான்றுகள் என்பதால் அதை ஏற்றுக் கொண்டு மின் இணைப்பு வழங்கிருக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

6.6 ஆனால், தற்போது ஒழுங்குமுறை ஆணையம் 5.12.2014 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ள செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்பதால், மன்றம் தங்களுடைய கோரிக்கையை தள்ளுபடி செய்துள்ளது. ஆனால், தங்களுடைய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட

நாளான 13.11.2013ல் மேற்கண்ட ஆணையில்லை. எனவே, 6.2.2014 மேல்முறையீட்டாளர்களின் விண்ணப்பங்களை தள்ளுபடி செய்தது தவறு என்று வாதிட்டார்.

6.7 குடியிருந்துவரும் தனி நபர்களின் பேரில் மேற்கண்ட இடத்தில் மின்இணைப்புகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன என்றும், எனவே, அதுபோல் இந்த மேல்முறையீட்டாளர்களுக்கும் அவர்கள் மின் இணைப்புகள் வழங்கப்படவேண்டும் என்றும் வாதிட்டார். மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி ஒழுங்குமுறை ஆணையம் தற்பொழுது அறிவித்துள்ள செல்லத்தக்க ஆவணங்கள் தங்களிடம் இல்லை என்பதையும் ஒத்துக் கொண்டார்.

## 7. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1 திருமதி. A. பிரேமலதா உதவி செயற்பொறியாளர், தில்லை நகர் அவர்கள் கலந்து கொண்டு எதிர்மனுதாரர் தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார். அவர் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 உதவி செயற்பொறியாளர் அவர்கள் மேல்முறையீட்டாளர்கள் குடியிருக்கும் இடம், ஜமியா மஸ்ஜீத் டிரஸ்ட் போர்டு சேலத்திற்கு சொந்தம் என்றும், அதற்கு ஆதாரமாக வட்டாட்சியர் சேலம் அவர்கள் அளித்துள்ள சான்றிதழை ஜாமியா மஸ்ஜீத் டிரஸ்ட் போர்டு அளித்து அவர்களது நிர்வாகத்தின் அனுமதியின்றி மின் இணைப்பு வழங்கக் கூடாது என்று வாரியத்திற்கு ஏற்கனவே 21.8.2007ல் கடிதம் அனுப்பியுள்ளார்கள் என்று தெரிவித்தார்.

7.3 மேலும், 2004க்கு பின்பு வழங்கப்பட்ட மின் இணைப்புகள் முத்தவல்லி ஜாமியா மஜித் டிரஸ்ட் போர்டு என்ற பெயரில்தான் வழங்கப்பட்டு வருகின்றது என்றும் வாதிட்டார்.

7.4 மேல்முறையீட்டாளர்கள் குடியிருக்கும் பகுதியில் தனி நபர்களை பெயரில் வழங்கப்பட்ட மின்இணைப்புகள் ஜாமியா மஜித் டிரஸ்ட் போர்டின் ஆட்சேபனை பெறுவதற்கு முன்பு வழங்கப்பட்டவை என்று வாதிட்டார்.

7.5 மேலும், மேல்முறையீட்டாளர்கள் தற்பொழுது குடியிருப்போர் என்று சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள செல்லத்தக்க சான்றிதழ்கள் என்று அறிவிக்கப்பட்டவை அல்ல என்பதால் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க முடியவில்லை என்று வாதிட்டார்.

7.6 மேலும், அவர்களின் மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்களை தள்ளுபடி செய்யும் பொழுது ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவில் செல்லத்தக்க சான்றிதழ்கள் எவை என்று குறிப்பிடப்படவில்லை, ஆனால், சட்டப்படியான குடியிருப்போர் என்பதற்கு மேல்மறையீட்டாளர் அளித்துள்ள ஆவணங்கள் பொருந்தாதது என்பதால் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்று வாதிட்டார்.

7.7 மேலும், சென்னையில் இதுபோன்ற டிரஸ்ட்போர்டுக்கு உரிமையான இடத்தின் மின் இணைப்பு பெற திரு. ஏழுமலை என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் (WP No18834/2009ல்) டிரஸ்ட் போர்டுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதுரை புரிந்தார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு :–</u>

8.1 மேலுமுறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது மேல்முறையீட்டாளர்களின் கோரிக்கையான அவர்களது வீட்டிற்கு வருவாய் துறை வழங்கிய குடியிருப்பு சான்று குடும்ப ரேசன்கார்டு, வாக்காளர் அடையாள அட்டையை பெற்றுக் கொண்டு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ளமுடியுமா ? என்பது ஆகும்.

8.2 மேல்முறையீட்டாளர்களின் பிரதிநிதி மேல்முறையீட்டாளர்கள் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை வட்டாட்சியர் சேலம் அவர்கள் அளித்துள்ள குடிருப்பு சான்றிதழ்கள் ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளதால் மேல்முறையீட்டாளர்கள் அவர்களின்

விண்ணப்பத்திலுள்ள விலாசத்தில்தான் குடியிருப்பவர்கள் என்றும் எனவே, குடியிருப்பவர் என்ற காரணத்தினால் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

8.3 மேலும், மின்சாரம் என்பது ஒரு அத்தியாவசமான தேவை என்றும் அது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும் என்பதால் (fundamental rights) அதை மறுப்பது தவறு என்றும் வாதிட்டார்.

8.4 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் 2.12.2013 நாளிட்ட ஆணையை சுட்டிக்காட்டி குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை ஒருவர் குடியிருப்போர் என்பதற்கான ஆதாரம் என்று கூறப்பட்டுள்ளது என்றும் எனவே, மேற்கண்ட இரண்டு ஆவணங்களுமே மேல்முறையீட்டாளர்கள் அனைவராலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் அவற்றை குடியிருப்போர் என்பதற்கான ஆதாரமாக எடுத்துக் கொண்டு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று வாதிட்டார். மேலும், மேல்முறையீட்டாளர்கள் விண்ணப்பம் சமர்ப்பித்த காலங்களில் அந்த ஆவணங்கள் தான் தேவை என்று இருந்ததால் மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தை தள்ளுபடி செய்தது தவறு என்று வாதிட்டார்.

8.5 மேலும், மேல்முறையீட்டாளர் போன்ற தனி நபர்களுக்கு மேற்கண்ட இடங்களில் மின் இணைப்பு வழங்கியது போல் இந்த மேல்முறையீட்டாளர்களுக்கும் வழங்கவேண்டும் என்று வாதிட்டார்.

8.6 எதிர்மனுதாரர் மேற்கண்ட மேல்முறையீட்டாளர்களின் மின் இணைப்பு கோரும் இடம்,ஜாமியா மஸ்ஜீத் டிரஸ்ட் போர்டுக்கு சொந்தமானது என்று சேலம் வட்டாட்சியர் சான்று அளித்துள்ளார் என்றும், ஜாமியா மஸ்ஜீத் டிரஸ்ட் போர்டு அந்த இடங்களில் தன்னுடைய தடையில்லா சான்று பெறாமல் மின் இணைப்பு வழங்க கூடாது என்று ஆட்சேபனை செய்துள்ளதாகவும் எனவே, மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்று வாதிட்டார்.

8.7 மின்சார பகிர்மான விதித்தொகுப்பு 27(4)இல் தெரிவிக்கப்பட்டுள்ள சட்டபடியான குடியிருப்பவர் என்பதற்கான சான்றுகள் எதையும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பிக்கவில்லை எனவே, அவரின் விண்ணப்பம் தள்ளுபடி செய்தது சரிதான் என்று வாதிட்டார்.

8.8 2004ஆம் ஆண்டிற்கு முன்பு வழங்கப்பட்ட மின்இணைப்புகள் தனியாரின் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது அப்பொழுது ஜாமியா மஸ்ஜீத் டிரஸ்ட் போர்டுவின் ஆட்சேபனை பெறப்படவில்லை, ஆனால், ஆட்சேபனை பெறப்பட்ட பின்பு மின் இணைப்புகள் முத்தவல்லி ஜாமியா மஜீத் டிரஸ்ட் போர்டு பெயரில்தான் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

8.9 மேலும், சென்னையில் மேற்கண்ட டிரஸ்ட் போர்டு சம்பந்தமான இடத்திற்கு மின் இணைப்ப வழங்க திரு. ஏழுமலை என்பவர் தொடர்ந்த W.P. No.18834/2009ல் வழக்கு டிரஸ்ட் போர்டுக்கு சாதமாக முடிந்துள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

8.10 எதிர்மனுதாரர் W.P. No.18834/2009 என்ற வழக்கின் தீர்ப்பு டிரஸ்ட் போர்டுக்கு சாதகமாக உள்ளது என்று வாதிட்டுள்ளதால் மேற்கண்ட வழக்கு எண். W.P. No.18834/2009ல் மதராஸ் உயர்நீதிமன்றத்தின் 8.10.2009 நாளிட்ட ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி 8மற்றும் 9 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"8. The present writ petition is for a mandamus directing respondents 1 and 2 to provide electricity service connection to the property in question, whicih accordig to the petitioner, under his occupation. However, the same is disputed by the learned counsel appearing for the electricity department as well as the impleaded party. In such circumstances, since the petitioner approached the second responent with necesary application form for grant of electricity service connection to the property in question, he has to establish before the said autority that he is entitled for such connection by producing documents to show that he is in legal occupation of the property in question.*

*9. Considering the above facts and cirucumstances of the cases, i direct the petitioner to approach the first respondent with necesary documents to prove that he is entitled to electricity service connection within a period of two weeks from the date of reciept of a copy of this order and on receipts of the same, the first respondnet is directed to consider the same and pass orders after hearing the petitioner as well s the third respondent, within a period of six weeks thereafter. "*

8.11 மேற்கண்ட ஆணையின் பத்தி 8இன்படி மனுதாரர் மேற்கண்ட இடத்தின் சட்டபூர்வமாக குடியிருப்பவர் என்பதற்கான ஆவணங்களை சமர்ப்பித்து உறுதி செய்ய வேண்டும் என்று தெரிகிறது.

8.12 எனவே, மேற்கண்ட ஆணையின்படி ஒரு சட்டபூர்வமான குடிருப்பவர் என்பதற்கான ஆவணங்களை சமர்ப்பித்தால் அவரின் விண்ணப்பத்தை மின்சார வாரியம் மின் இணைப்பு வழங்க பரிசீலித்து ஆணை வழங்க வேண்டும் என்று தெரிகிறது.

8.13 மேல்முறையீட்டாளர்களின் பிரதிநிதி 2.12.2013 நாளிட்ட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணையின்படி குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவைகளும் செல்லத்தக்க சான்றுதான் என்றும் அவை, மேல்முறையீட்டாளர்கள் மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்த காலத்தில் வழக்கிலிருந்தன என்று வாதிட்டு அந்த ஆணையின்படி மின் இணைப்பு வழங்கப்பட்டு இருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு வழங்காமல் தற்பொழுது 3.12.2014ல் உள்ள ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணையின்படி மின் இணைப்பு வழங்கவில்லை என்பது தவறு என்று வாதிட்டார்.

8.14 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி குறிப்பிடும் அந்த ஆணை ஒழுங்குமுறை ஆணையத்தினால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)இன் வரைவு திருத்தம் ஆகும். மேற்கண்ட வரைவு திருத்தம் 2.12.2013 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வலைதளத்தில் வெளியிடப்பட்டது. அந்த 27(4)ன் வரைவு திருத்தம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

*"(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in FORM 5 of ANNEXURE III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce valid proof of his/her being in occupation of the premises and also execute an indemnity bond in FORM- 6 of ANNEXURE III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate.*

*Explanation: For the purpose of this sub regulation, the expression valid proof means any proof of occupancy such as lease agreement or address proof issued by the State or Central Government such as family card or voters ID or Adhar Card or Passport or Drivisng licensee or such certificate isued by the Local Bodies"*

**8.15** மேற்கண்ட வரைவு திருத்தத்தின்படி செல்லத்தக்க சான்றுகள் என்பதில் மேல்முறையீட்டாளர் வாதிடும் குடும்ப அட்டை வாக்காளர் அடையாள அட்டை போன்றவைகள் உள்ளன.

**8.16** ஆனால்,மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் 27(4)ற்கு திருத்தம் 3.12.2014ல் வெளியிடப்பட்டுள்ளது. அந்த திருத்தப்பட்ட 27(4)விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

" *(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce valid proof of his being in occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out off effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate.*

*Explanation : For the purpose of this sub regulation, the expression valid proof means any proof of occupancy such as registered power of attorney or latest rent receipt isued prior to the date of application or lease deed or possession order from appropriate authority or decreee or judgment of Courts"*

**8.17** எனவே, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை எனப்படுபவை செல்லத்தக்க சான்றுகள் என்று வரைவு திருத்தத்தில் இருந்தது, ஆனால், திருத்தப்பட்ட பகிர்மான விதி தொகுப்பின் விதி27(4)ல் அவைகள் இல்லை என்று தெரிகிறது.

8.18 வரைவு திருத்தம் என்பது ஒரு முன் மொழிவு (proposal) தான் அது விதியாகாது. வரைவு திருத்தம் வலைதளத்தில் வெளியிடப்பட்டு பலதரப்பட்ட stakeholderகளின் கருத்துக்கள் பெறப்பட்டு ஆராயப்பட்டு முடிவில் ஆணையத்தின் அனுமதிபெற்று அரசிதழில் வெளியாகும் பொழுதுதான் அது வழக்கத்திற்கு வரும். எனவே, வரைவு திருத்தம் என்பது விதி ஆகாது.

8.19 குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவைகள் திருத்தியமைக்கப்பட்ட மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)ன்படி ஒரு குடியிருப்போர் என்பதற்கான செல்லத்தக்க சான்றுகள் இல்லை என்பதினால் மேற்கண்ட மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையது அல்ல என்று நான் கருதுகிறேன்.

8.20 மேலும், குடியிருப்பவருக்கு மின்சார இணைப்பு வழங்குவது பற்றி நாம் தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)ஐ ஆராய வேண்டும். மேற்கண்ட விதி27(4) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

" *(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce valid proof of his being in occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out off effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate.*

*Explanation : For the purpose of this sub regulation, the expression valid proof means any proof of occupancy such as registered power of attorney or latest rent receipt isued prior to the date of application or lease deed or possession order from appropriate authority or decreee or judgment of Courts"*

8.21 மேற்கண்ட விதி 27(4)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது இருப்பிடத்திற்கு சொந்தக்காரராக இல்லாத மின் இணைப்பு கோரும் விண்ணப்பதாரர் இருப்பிட உரிமையாளரின் சம்மத கடிதத்தை பெற்றுத்தரவேண்டும். அவ்வாறு சம்மதகடிதம்தர இருப்பிட உரிமையாளர் மறுத்துவிட்டால் விண்ணப்பதாரர் கீழ்கண்ட ஆவணங்கள் தரவேண்டும்.

(1) அந்த இடத்தில் குடியிருப்பதற்கான செல்லதக்க சான்றை தரவேண்டும். செல்லதக்க சான்று என்பது கீழ்கண்டவைகளில் ஏதேனும் ஒன்று

(i) பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் (Registered power of attorney)

(ii) மின்னிணைப்பு கோரும் விண்ணப்பத்தின் தேதிக்கு முன் அளிக்கப்பட்ட சமீபத்திய வாடகை ரசீது (Latest rent receipt issued prior to the date of application)

(iii) குத்தகை ஒப்பாவணம் (lease deed)

(iv) நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவுகள் (decree or judgment of courts) உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடமைகட்டளை போன்ற குடியிருப்பு சான்று (Possession order from appropriate authority)

(ii) படிவம் 6இன் படியான காப்புறுதி பத்திரம் (Indemnity Bond in form 6)

(iii) இரட்டிப்பு மடங்கு காப்புறுதித் தொகை (Twice the normal rate)

8.22 இந்த மேல்முறையீட்டாளர்கள் இரண்டு மடங்கு காப்புறுதித்தொகை செலுத்த சம்மதம் என்றும் படிவம் 6இன்படியான காப்புறுதி படிவம் தரவும் சம்மதம் என்று தெரிவித்துள்ளார் ஆனால், அவர்கள் இருக்கும் இடத்தின் குடியிருப்போர் என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)ல் கூறியுள்ள ஆவணங்களாக இல்லை. குடியிருப்போர் என்பதற்காக சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் 3.12.2014ல் திருத்தியமைக்கப்பட்ட விதி 27(4)ல் தெளிவுபடுத்தியுள்ள ஆவணங்களாக இல்லை என்பதை மேல்முறையீட்டாளரின் பிரதிநிதியும் ஒத்துக் கொண்டுள்ளார்.

8.23 எனவே, மேல்முறையீட்டாளர்களின் கோரிக்கையான குடும்ப ரேசன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் வருவாய்த்துறை வழங்கிய குடியிருப்பு சான்றுகளை ஏற்றுக் கொண்டு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)ற்கு இணங்க இல்லை என்பதால் மேல்முறையீட்டாளர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 9. <u>முடிவுரை</u>

9.1 பத்தி எண்.8.23யிலுள்ள என்னுடைய தீர்வின்படி மேல்முறையீட்டாளர்கள் சமர்ப்பித்துள்ள குடியிருப்போர் என்பதற்கான சான்று தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி27(4)இல் கொடுக்கப்பட்டுள்ள செல்லத்தக்க சான்றுகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ள சான்றுகளாக இல்லை என்பதால், சேலம் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வை மாற்றி அமைக்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

9.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.20/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி. ஏ. மஞ்சு, க/பெ அய்யனார்,
2) திருமதி. பி. கோகிலா, க/பெ பூமாலை,
3) திருமதி. ஆர் கண்ணகி, க/பெ ராஜு
4) திருமதி. டி. அமிர்தவள்ளி, க/பெ துரைசாமி,
5) திரு. ஜெ. இளங்கோ, த/பெ ஜெகநாதன்,
6) திருமதி. எஸ். சரசு, க/பெ செல்வம்
ரயில்வே லைன் தெற்கு தெரு,
பொன்னம்மாபேட்டை, சேலம் – 636 001.
கைபேசி – 9791564519

2) மேற்பார்வை பொறியாளர்,
சேலம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி, உடையப்பட்டி,
சேலம் – 636 014.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சேலம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி, உடையப்பட்டி, சேலம் – 636 014.

4) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
காஞ்சிபுரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஒலி முகமது பேட்டை, காஞ்சிபுரம் – 631 502.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.